Registered as a News Paper at the G. P. O. Sri Lanka Under No. QB/8965/80

# ஐக்கியதீபம்

மலர்: 36 கார்த்திகை 1980 இதழ் 4

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஊ நா சங் | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-65 |
| கடன் மனுப்பத்திரம் ஊ நா ச | 10 |
| கடன் முறி ஊ நா ச | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |
| கேள்விப் பத்திரம் | 10 |


சமூகம் கூட்டுறவின்

# பயனை அடைய பெண்கள் உழைக்க வேண்டும்!

## பிரதேச நெறியாளர் உரை

**கூட்டுறவு நல்ல வளர்ச்சி அடைவதற்கும் அதன் பயனைச் சமுதாயம் முழுமையாகப் பெறுவதற்கும் ஆண்கள் மாத்திரம் அதில் உழைத்தால் போதாது பெண்களும் அந்த இயக்கத்தில் சேர்ந்து உழைக்க முன்வரவேண்டும்.**

இவ்வாறு அனைத்துலக கூட்டுறவு இணைப்புச் சம்மேளனத்தின் தென்கிழக்காசிய பிரதேச நெறியாளர் திரு. ஆர். பி. இராஜகுரு கூட்டுறவு மகளிர் தலைவிகள், ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், கல்வி உதவியாளர் ஆகியோர்களுக்கு வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுவின் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா இக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

### திணைக்களமும் கூட்டுறவுச் சபையும்

மக்களுக்குச் சிறந்த சேவை ஆற்றுவதிலே பலம் மிக்க இயக்கமாகக் கூட்டுறவு இயக்கத்தினை விளங்கச் செய்வதற்கு தேசிய கூட்டுறவுச் சபையும் கூட்டுறவுத் திணைக்களமும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று மேலும் பேசுகையில் அவர் கூறினார்.

இப்பகுதியில் சில சங்கங்கள் மகளிர் குழுக்கள் மூலம், மகளிரின் கூட்டுறவு முயற்சித் திட்டங்களில் ஈடுபாடு கொண்டு உழைத்து வருவது மகிழ்ச்சிக்குரியது என்று குறிப்பிட்ட அவர், தன்னுதவி, பரஸ்பர உதவி ஆகியவை மூலம் கூட்டுறவு இயக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை இத்தகைய உண்மையான கூட்டுறவு முயற்சிகளில் ஈடுபடுவோர் உணர்வார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

ப. நோ. கூ. ச. ஒரு தொகையினை ஒதுக்கவேண்டும்

கூட்டுறவு மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டத்தைச் சிறப்பாக நடாத்துவதற்கென ப. நோ. கூ. சங்கங்கள் 1981ம் ஆண்டில் ஒரு தொகையினை அதற்கு ஒதுக்கவேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் பொதுச் செயலாளர் திரு சி. அங்குனுவெல பேசுகையில் கூறினார்.

குடும்பப் பெண்கள் நல்ல போஷாக்குணவைத் தயாரிப்பதற்கும் குடும்ப வருமானத்திற்கேற்ப திட்டமிடப்பட்ட செலவினைச் செய்வதற்கும் இப்படியாகச் சிறந்ததோர் வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதற்கு மகளிர் குழுக்கள் உதவி வருகின்றன என திரு. அங்குனுவெல மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

இம்மகளிர் குழுக்களை நிறுவி நடாத்துவதற்கு யாழ் மாவட்டத்திலே

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பனஞ் சீனி உற்பத்திக்கு உதவி வேண்டும்

1981-ல் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களினால் ஆரம்பிக்கப்படவுள்ள பனஞ்சீனி உற்பத்தித் திட்டத்திற்கு அரசாங்கம் நிதியுதவி வழங்க வேண்டும். அதே வேளையில் மட்டுப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இப்பகுதி தேசியப் பேரவை உறுப்பினர்கள் குறித்த திட்டத்திற்கென சங்கங்களுக்கு ஒரு இலட்ச ரூபாவினை ஒதுக்கித் தரவேண்டும் என்று கோரும் தீர்மானம் பனஞ்சீனி உற்பத்தி செய்வதுபற்றி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்திய மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

## செவி, கட்புல உபகரணங்கள் அன்பளிப்பு

சுவீடன் கூட்டுறவாளரின் அன்பளிப்பாக செவி, கட்புல உபகரணங்கள் யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரிக்கு இலங்கை கூட்டுறவு ஆசிரிய பயிற்சித் திட்டம் மூலம் வழங்கப்படவிருக்கின்றன.

எதிர்வரும் 14-ந் திகதி முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் மேற்படி உபகரணங்களின் அன்பளிப்பு வைபவமும், கூட்டுறவாளர் மகாநாடும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் மாவட்ட தேசியப் பேரவை உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர், யாழ் மாவட்ட அமைச்சர், ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர், இலங்கை கூட்டுறவு ஆசிரியர் பயிற்சித் திட்டப் பணிப்பாளர் ஆகியோரும் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## சங்கங்களின் தலைவர்களுக்கு தேசீய மகாநாடு

இலங்கையிலுள்ள சகல ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்களுக்கான ஒரு தேசிய மகாநாட்டினை ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை 1981-ம் ஆண்டு ஜனவரி 9-ந் திகதி கொழும்பில் நடாத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றது.

இம்மகாநாடு கூட்டுறவு இல்லத்தின் பிரதான கூட்ட மண்டபத்தில் காலை 10 மணிக்கு மாண்புமிகு உணவு, கூட்டுறவு அமைச்சர் எஸ். பி. ஹேரத் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகும்.

கூட்டுறவு வங்கி ஒன்றினை அமைத்தல், கூட்டுறவுக் காப்புறுதிச் சங்கத்தினை அமைத்தல், வருமான வரி செலுத்துவதிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களை விடுவித்தல், 198 -ல் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கூட்டுறவுச் சம்மேளனம் ஆகிய விடயங்கள் குறித்து மேற்படி மகாநாட்டில் ஆராயப்படும்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

# முனைப்பான செயற்பாட்டை நோக்கி

இங்கிலாந்திலே புதிய கைத்தொழில் பொருளாதார அமைப்பு வளர்ச்சியடைந்து வந்த காலகட்டத்திலே தான் நவீன கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியுறத் தொடங்கியது. முதல் நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் நீண்ட ஆயுளைப் பெற்றிருக்கவில்லை. பாவனையாளர் சங்கங்களாகவும், கூட்டுறவு ஆலைகளாகவும், பேக்கறிகளாகவும் வடிவமெடுத்த இவை தற்காப்பு நடவடிக்கைகளாகவே இருந்தன. எவ்வளவு கடினமாக உழைத்தும் ஒருவேளை உணவுக்கே திண்டாட வேண்டிய நிலையிலிருந்த பொருளாதார ரீதியாகப் பலவீனமுற்றிருந்த சமூகத்தட்டே இச்சங்கங்களை நிறுவின. கொடூரமான சுரண்டலிலிருந்து ஓரளவிற்காயினும் தம்மைப்பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு தனித்தனியே பலவீனமுற்றிருந்த இச்சக்திகள் ஒன்றிணைந்து தமக்கும் ஓர் இடத்தினைப் பிடித்துக் கொள்ள மேற்கொண்ட துணிகர முயற்சிகளின் விளைவாகவே இச்சங்கங்கள் தோன்றின.

இக்கதை மீண்டும் மீண்டும் தொடர்ந்தது — புதிய பொருளாதார அமைப்பு ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் பரவி விவசாயம், கைப்பணிகள் போன்ற துறைகளையும் பாதிக்கத் தொடங்கியபோது றொச்டேல் முன்னோடிகள் பல தசாப்தங்களாக ஏற்பட்ட கூட்டுறவுத் தோல்விகளின் படிப்பினையை நன்கு கற்று பாவனையாளர் சங்கங்களை நடத்துவதில் சில அடிப்படைக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதெனத் தீர்மானித்தனர் வெற்றியும் ஈட்டினர். இதே போன்று ஜேர்மனியில் ரவேய்சனும், சூல்ஸ்டிலிசும் வெற்றிகரமாகக் கடனுதவி, வழங்கீட்டுக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தனர். இந்த வெற்றிகரமான முன் உதாரணங்கள் பொருளாதார ரீதியாக வலுவிழந்த மக்களுக்குத் தமது நிலைமை மேலும் சீர்கெடுவதைத் தடுப்பதற்கு மட்டுமல்ல, தமது நிலையினை உயர்த்துவதற்கும் வாய்ப்பளித்தது. வீடமைப்பு, சுகாதாரம், போக்குவரத்து, கடற்றொழில், காப்புறுதி போன்ற ஏனைய பொருளாதார முயற்சித் துறைகளிலும் கூட்டுறவுக் கோட்பாடும், நடைமுறைகளும் வெற்றிகரமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. சில தோல்விகள் ஏற்பட்ட போதிலும் பொதுவாக எந்தவொரு துறையிலும் மக்கள் தம்மை எதிர்நோக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு கூட்டுறவு முறையினைக் கெட்டியாகக் கடைப்பிடிக்க முயன்ற போது பெரும்பாலும் வெற்றியே ஏற்பட்டது

றாரொல்வ் குஜேஸ்

கூட்டுறவுச் சங்கங்களின் கணிசமான வளர்ச்சியினதும் விரிவாக்கலினதும் விளைவாக புதிய பிரச்சினைகள் தோன்றின, சிலவேளைகளிலே—இவை ஒரு சில தனிப்பட்ட சங்கங்கள் என்றும் சொல்வதற்கில்லை — பொருளாதார வெற்றியே குறிக்கோளாயிற்று முன்னோடிகளின் காலங்களிலும் கூட்டுறவு இயக்கத்தின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டங்களிலும் மேலோங்கியிருந்த சமூகக் குறிக்கோள்கள் இப்பொழுது பின் தள்ளப்படலாயின. சிலர் ஒரு கூட்டுறவு நியதியைக்கூட வரையறுத்துள்ளனர் அது வருமாறு: எவ்வளவு கூடுதலாகக் கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரம் பெருகுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கூட்டுறவுச் சங்கங்களின் வணிகத் தன்மை மேலோங்கி அதன் சமூகத்தன்மைகள் மறக்கடிக்கப்படுகின்றன.

இந்த வளர்ச்சிப் போக்கிற்கு ஏற்ப தன்விருப்பார்ந்த தலைவர்களின் செல்வாக்கு குன்றி தொழில்முறை முகாமையாளரின் பங்கு விரிவடைகின்றது பல கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு சமூக இயக்கத்திற்குரிய தமது தன்மைகளை இழப்பதோடு மேலாதிக்கம் பெற்றுள்ள அதிகார பீடத்துடன் இரண்டறக் கலந்து விடுகின்றன.

, கைத்தொழில் மயமான நாடுகளிலேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே இதுவே மேலோங்கியிருக்கும் போக்கு என்பதை எண்பிப்பது கடினமல்ல. எனினும் புறநடைகள் இருக்கத்தான் செய்கின்றன.

(வளரும்)

# ஆயிரம் மலர்களே!

நீடடோலை—கபிலர்

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயகா அவருக்குச் சூட்டப்பட்ட நறுமண மிக்க பூமாலைகளை ரசித்து இவ்வளவு அழகான பூக்கள் பெருவாரியாக வடபகுதியில் இருக்கின்றனவா என்று வியந்து, இப்பூக்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாமே என்று ஒரு கருத்தினைக் கூறியதாக ஒரு பத்திரிகையில் படித்தேன்.

இக்கருத்தினை யாராவது உன்னிப்பாக மனதில் கொண்டு சிந்திக்கின்றனரோ தெரியவில்லை; இதுபற்றிச் சிந்தித்துத் திட்டங்களை ஏற்றபடி வகுத்துச் செயற்படுவது நன்மை பயக்குமெனக் கருதுகின்றேம்,

தென்பகுதியிலும் மலையகத்திலும் ஓர்க்கிட் மலர்ச் செடிகளைப் பயிரிட்டு அதன் மலர்களை விற்பது பெரிய இலாபமளிக்கும் வியாபாரமாக இருந்து வருகின்றது. ஓர்க்கிட் மலர்க் கூட்டுறவுச் சங்கங்கள் இதற்கென நிறுவப்பட்டு நீண்ட காலங்களாக இத்துறையில் செயற்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் வெளிநாடுகளுக்கு ஓர்க்கிட் மலர்களை ஏற்றுமதி செய்து நல்ல லாபமடைந்து வருகின்றன.

ஓர்க்கிட் மலர்கள், மல்லிகை, முல்லை, நந்தியாவட்டை முதலிய மலர்களைப் போல் விரைவில் வாடாது தாக்குப்பிடிக்கும் தன்மையுள்ளவை. மேலே குறிப்பிட்டவை போன்ற சில பூக்களை வாடாது பாதுகாப்பதற்கு நாம் தண்ணீர் தெளித்து வைத்தால் அவை கயர் நிறமாக மாறிவிடுவதை அனுபவத்தில் பார்த்து வருகின்றேம்.

விஞ்ஞான சாதன முறையில் இம்மலர்களின் தன்மை மாறாது பாதுகாப்பாக வெளிநாடுகளுக்கு அனுப்ப விஞ்ஞான நிபுணர்களின் கைவண்ணம் உதவலாம் ஓர்க்கிட் மலர்களும் அவ்வாறே அனுப்கப்படுகின்றன. ஓர்க்கிட் மலர்கள் அழகானவை ஆனல் அவற்றில் நறுமணம் இல்லை.

மல்லிகையினதும், முல்லையினதும் சுகந்தம் அற்புதமானது மேலும் உஷ்ணப்பிரதேசங்களில் பூக்கும் மல்லிகையின் நறுமணமும் முல்லையின் நறுமணமும் தனித்துவமானவை. இம்மலர்களைப் போன்ற நறுமணம் வாய்ந்த மலர்களையும் செவ்வந்தி போன்ற இலகுவில் வாடாத பல அழகு வண்ண மலர்களையும் வெளிநாடுகளுக்கு வியாபார முறையில் அனுப்பலாமா என்று கூட்டுறவுச் சங்கங்கள் சிந்திப்பது நல்லது.

இந்தியாவில் பலர் பூந்தோட்டங்களைப் பெருமளவிலே செய்து பூ வியாபாரத்தினைச் சிறந்ததோர் வியாபாரமாகச் செய்து வருகிறார்கள் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

வடபகுதி செம்மண்ணில் தனிப்பட்ட பலர் றோசாத் தோட்டங்களைச் செய்து பூக்களை விற்று நல்ல லாபமடைந்து வருகின்றனர் இதனை தமது முழுநேரத் தொழிலாக மோட்டார் வாகனங்களையும் வைத்து நடாத்துமளவிற்கு அவர்களுக்கு பூந்தோட்டம் நலல மலர்ச்சியைக் கொடுக்கின்றது.

சிலர் அத்தர் தயாரிப்பதற்கென்று மல்லிகைச் செடிகளை சிறு அளவில் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இங்கு மாரிகாலத்தில் அருமையான ஆயிரமாயிரம் வாசனைப் பூக்களெல்லாம் பூத்துவீணே நிலத்தில் உதிர்ந்து போகின்றன. இதனை நாம் பொருளாதார அடிப்படையில் நோக்கிஆக்கபூர்வமான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பல பிரச்சினைகளுக்கூடாகப் போராடி உடல் காயும் விவசாயி இந்தப் பூ விடயத்தையும் சிறிது சிந்தித்து தமது வாழ்வு மலர்ந்து மணம் வீச வழிதேட வேண்டும், குறிப்பாக நமது கூட்டுறவுச் சங்கங்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும்; அதன் மூலம் விவசாயிகளுக்கு உதவவேண்டும்.

# சொந்த இலாபத்தில் உதவி

சில ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் அபிவிருத்திக்காக தமது சொந்த இலாபப் பணத்தில் உறுப்பினர்களுக்கு உதவியளித்து வருவது மிகவும் மெச்சத்தக்க விடயமாகும்.

இவ்வாறு கூட்டுறவு உதவி அக்க ஆணையாளர் (தெங்கு பனம் பொருள்) திரு . வேலாயுதபிள்ளை தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் நடைபெற்ற ஒரு கருத்தரங்கிலே பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் பெருந்தொகையான வரிப் பணத்தை தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்தி வருவதோடு தமது உறுப்பினர்களுக்கும் இவ்வாறு உதவி வருவது ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுக்கெல்லாம் முன் மாதிரியான செயலாகும் என்று மேலும் பேசுகையில் அவர் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இதற்கு எடுத்துக் காட்டாக சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் தனது இலாபத்தில் உறுப்பினர்களுக்கு மரக் கடனுக ஒன்றரை லட்சம் ரூபாவினை வழங்கியமையைச் சுட்டிக் காட்டினர்.

சில சங்கங்கள் முன்னைய முகாமையாளர்களின் திறமையற்ற நிருவாகங்களினல் சீர்குலைந்திருந்தன. இன்று அச்சங்கங்கள் புதிய முகாமையாளர்களின் செயற்பாட்டின் திறத்தால் திறம்பட இயங்கி வருகின்றன என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினர்

# ஈழத்து எழுத்தாளரின் சாதனை

‘ஆனந்த விகடன்’ பொன் விழாவை யொட்டி நடாத்தப்பட்ட நாவல் போட்டியில் மர்ம நாவலுக்கான முதலாவது பரிசை ஈழத்து எழுத்தாளரான அருள் சுப்பிரமணியம் பெற்றமை ஈழத்து இலக்கிய உலகிலே ஒரு பெரிய சாதனையாகும்!

இந்திய நாணயப்படி பரிசுக்கான தொகை இருபதினாயிரம் ரூபா. இலங்கையில் அது ஏறத்தாழ நாற்பதினாயிரம் ரூபா.

ஈழத்து எழுத்தாளர் ஒருவரது வண்ணமான எழுத்திற்கு நாற்பதினாயிரம் ரூபா கிடைத்தமை இங்குள்ள எழுத்துலகில் நிறைவான, மகிழ்ச்சியான, மகத்துவமான ஒரு சம்பவமாகும்!

லங்கையில் எழுத்தாளனின் நிலை பலர் அறியாததல்ல. பெரிய ‘பண

( தொடர்ச்சி 8—ம் பக்கம்)

(முற்றொடர்)

# கூட்டுறவு மகளிர் குழுவின் செயல் திட்டங்களும் நடைமுறைப்படுத்தலும்

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் M. A
கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி நல்லூர் ப. நோ. கூ. ச

## 4. வேலைத் திட்டங்களை உருவாக்குதல்

குறிக்கோள்களை நன்கு விளக்கி, திட்டங்களைச் செயற்படுத்தும்போது அவற்றுக்கான வேலைத்திட்டங்களை வகுக்க வேண்டிய தவசியமாகும் வேலைத்திட்டம் தயாரிக்கு போது சில கருத்துக்களை மனத்திற் கொள்ளவேண்டும்.

1. ஒரு குறிப்பிட்டசெயல் நடவடிக்கையைச் செயற்படுத்தி முடிப்பதற்குத் தேவையான காலத்தை மிகவும் கவனமாக அவதானிக்க வேண்டும்
2. வேலைத் திட்டத்திற்குரிய பொருள் வருவாயைத்திட்டமி வேண்டும். உதாரணமாக, சிறு வருவாய் தரக்கூடிய சிறிய உற்பத்திகளை ஊக்குவிக்கும் திட்டங்களை வேலைத் திட்டங்களாக வகுக்கும் போது நிதிநிலைமை பற்றிய தெளிவு அவசியமாகும்.
3. சந்தைப்படுத்தல்தொடர்பான பிரச்சினைகள் பற்றிய தெளிவு அவசியம்.
4. மகளிர் அனைவரும் பங்குபற்றக்கூடிய செயல் முறைவகுப்புகளை ஒழுங்கு செய்தல்.
5. நிதி பற்றிய தரவுகளை அறிதல்

இத்தகைய கருத்துக்களை மனதிற்கொண்டு வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போது நாம் தயாரித்த பாரிய திட்டத்தின் செயற்பாட்டையும் பயனையும் ஓரளவு கண்டுகொள்ள முடியும். ஒரு கிளைக்குழுவினரின் திட்டங்களோடு இன்னொரு கிளைக்குழுவினரின் திட்டங்கள் ஊடுருவுவதையும் இதன்மூலம் தவிர்த்துக் கொள்ளலாம் சிறுசிறு வருவாய் தரக்கூடிய உற்பத்திகளை இனங்கண்டு, தனித்தனி உற்பத்திகளைச் செய்வதற்கு வாய்ப்புண்டாகும். உதாரணமாக, சோயா உணவுப் பதார்த்தங்களை வருவாய் கருதிச் செய்யும்போது, ஒன்றிற்கு மேற்பட்ட கிளையினர் அதனைச் செய்வதால் வருவாய் குன்றக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

வேலைத் திட்டங்கள் யாவும் முன்னர் திட்டமிட்ட செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவே அமைய வேண்டியது அவசியமாகும். இன்றேல் திட்டத்தின் முக்கிய குறிக்கோளை அடைவது சாத்தியமாகாது. வேலைத் திட்டங்களைத் தயாரிக்கும் போது, நிதி பற்றிய தரவுகளையும் ஆராய வேண்டியது அவசியமாகும். நாம் இதற்காகச் செலவழிக்கின்ற பணம் மகளிர் அங்கத்தவர்கள் மூலமாகச் சேர்க்கப்பட வேண்டியுள்ளதா அன்றேல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிதியிலிருந்து பெறப்படவிருக்கின்றதா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். முக்கியமாக மற்றவர்களது பங்களிப்பினையோ, ஒதுக்கீட்டினையோ எதிர்பார்க்கிராது, மகளிரே கூட்டுறவு அடிப்படையில் சேகரிக்கப்பட்ட நிதியை ஏற்படுத்திக் கொள்வதே சிறந்ததாகும். இவ்வாறு சேகரிக்கப்படும் நிதி, கட்டுப்பாடற்றதாகவும் சுதந்திரமானதாகவும் வேலைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய தொன்றாகவும் அமையும். உதாரணமாக, நூலகம் ஒன்றினை மகளிர் குழு அமைப்பதாக இருப்பின் நூல்களை வாங்குவதற்குரிய பணத்தைச் சேகரிப்பதற்காக அங்கத்துவப்பணமாக ஒரு சிறு தொகையைச் சேகரிக்கலாம். அதனைவிட, மூலதன வைப்பாக ஒருசிறு தொகையைச் சேமித்து வைக்கலாம். இதனால் நிதிநிலைமை சீராக ஏற்புண்டாகின்றது. வேலைத்திட்டம் இடை நிறுத்தமின்றிச் செயற்படக் கூடியதாயுமிருக்கும். இதைவிட வேறு வகையில் நிதி கிடைக்கக் கூடிய வாய்ப்பிருக்கும் என்ற நம்பிக்கையில் இத்தகைய திட்டங்களை ஆரம்பிப்பது நடைமுறையிற் பிரச்சினைகளையே ஏற்படுத்தும். நிதி பற்றிய திட்டவட்டமான ஒரு கருத்து ஏற்படவும் இதனால் வழியுண்டாகிறது. நூலகத்திற்கு வேண்டிய நூல்கள் எவ்வளவு பணத்திற் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றது என்பதைத் தீர்மானித்துச் செயற்பட முடிகின்றது. இதனால், பின்னர்மாதாந்த வருடாந்த மகளிர் அங்கத்தவர் தொகைக்கும் நிதிக்குமேற்பச் செயற் திட்டங்கள் வளர்ச்சி பெற முடியும்

## 5. திட்ட நடவடிக்கைகளைச் செயற்படுத்துதற்குத் தேவையான வள ஆதாரங்களைப் பகுப்பாய்வு செய்தல்.

செயல்முறைத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னர் அவற்றைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய வள ஆதாரங்களை நன்கறிய வேண்டும். இதனால் நடைமுறைச் சாத்தியமான திட்டங்களைத் தயாரிக்க முடியும். வள ஆதாரங்களின் உதவியுடன் சிறு திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி அதன்பின்னர் பெரிய அளவிலான திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த முடியும். திட்டங்களைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு நடவடிக்கையையும் செயற்படுத்த உதவக் கூடிய வள ஆதாரங்களைப் பகுத்தறிந்து கொள்ள வேண்டும். வள ஆதாரங்களைப் பின் வருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம்.

1. மனித வளம்
2. பொருள் வளம்
3. நிதி வளம்

இத்தகைய வள ஆதாரங்களைப் பற்றித் தெளிவுற அறிந்திருத்தல் அவசியமாகும். மனித வளம் என்னும் போது திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும் தேர்ச்சிபெற்ற இணைப்பாளர்களும், தொழில் நுட்ப வல்லுனர்களும் தேவைப்படும் பொருள் வளத்தைப் பொறுத்த வரையில் பயிற்சிக்கென ஓர் இடம், பயிற்சிக் கருவிகள் கைநூல்கள் என்பன தேவைப்படலாம். உதாரணமாக, சோயா உணவுப் பதார்த்தமொன்றைச் செய்வதனால், அதற்குரிய சமையற் கூடக் கருவிகளும் நூல்களும் தேவைப்படும் நிதி வளத்தைப் பொறுத்த வரையில் இவற்றினால் ஏற்படக்கூடிய மேலதிகமான செலவுகளுக்குரிய பணம் எவ்வாறு பெறப்பட வேண்டுமென்பதும் அவசியமானதாகும். திட்டங்களிலே பங்கு கொள்ள வருகின்ற தொழில் நுட்பவியலாளர்களுக்கும், பயிற்சிநெறியாளர்களுக்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதற்கு மேலதிக நிதி தேவைப்படலாம் இந்நிதியைப் பற்றிய கட்டுப்பாடு சில சந்தர்ப்பங்களில் மிகவும் அவசியமானதாகும். உதாரணமாக, பண உதவி தாராளமாகக் கிடையாத இடங்களில் அவற்றினைப் பெறுதற்குப் பல வழிகளிலே முயலவேண்டி நேரிடும். திட்டங்களிலே பங்கு கொள்ள வருகின்ற மகளிர் தத்தமக்குரிய வசதிகளைத் தாமே மேற்கொள்ளுவதன் மூலம் இப்பிரச்சினையை ஓரளவு தீர்த்துக் கொள்ள முடியும். உதாரணமாக, வேலைத்திட்டம் ஒரு முழு நாளையதாக இருப்பின், உணவு போன்ற வசதிகட்குப் பணம் செலவழிப்பது கஷ்டமாக இருக்கும் இச்சந்தர்ப்பங்களில் தத்தமது வசதிகளைத் தாமே கவனித்துக் கொள்வதால் திட்டத்தின் நிதி வளத்தினைப் பாதிக்காதிருக்க முடியும்.

## 6. திட்டத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.

மாதர் குழுக்கள் தாம் ஆரம்பிக்கவிருக்கின்ற செயல் திட்டங்களுக்குரிய வரவு-செலவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவது அவசியமாகும். ஆரம்ப நிலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் குறிப்பிட்ட ஒரு தொகை நிதியை இதற்கென ஒதுக்கீடு செய்ய முடியும். ஆனால் அந்நிதி தயாரிக்கின்ற திட்டங்களைச் செயற்படுத்தப் போதாததாக அமையலாம். எனவே, அதற்கான நிதியைப் பெறக் கூடிய வேறு வழிகளையும் நாடவேண்டும். ஆண்டுத் திட்டங்களை வருட ஆரம்பத்திலேயே தயாரிக்கும் போது வரவு-செலவுத் திட்டத்தையும் அதற்கேற்ற நிலையிற் தயாரிக்கவேண்டும். சகல செலவுகளையும் வரவு-செலவுத் திட்டத்தில் புலப்படுத்த வேண்டும். ஏனெனில், செலவுகள் நிர்ணயிக்கப்பட்ட பின்னர் தான எவ்வழிகளில் இச்செலவுக்கு வேண்டிய நிதியினைப் பெறலாம் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

முக்கியமான செயல் திட்டங்களுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப் படும்போது சில விடயங்களை அவதானிக்க வேண்டும்.

1. திட்டச் செலவுக்கான நிதியை எவ்வெவ் வழிகளிற் சேர்க்கலாம்.
2. சேர்க்கப்படும் நிதியின் கட்டுப்பாடு எத்தகையது.
3. நிதி ஒதுக்கீடு.
4. வெளிவாரி நிதிகள் சேர்த்தல்.
5. அங்கத்தவரது முயற்சிகள்.

திட்டங்களுக்கான நிதியைச் சேகரிக்கும்போது பலவழிகளில் அதனைச் சேகரிக்க முடியும்; ஒன்று, தனிப்பட்ட முறையில் சேகரிக்கப்படும் மேலதிக உறுதியான சந்தாக்கள் உதாரணமாக, மகளிர் குழுக்கள் செயற்படுத்தவிருக்கும் நூல் நிலையத்துக்கென மேலதிகமான சந்தாக்களை ஏற்படுத்தலாம் பிரத்தியேக வகுப்புக்களுக்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள், பண்டசாலைகளிற் பெறும் வருமானம், விற்பனையாற் பெறும் லாப நிதிகள் என்பவற்றால் ஆண்டுத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய நிதியைப் பெறலாம். இவ்வாறு சேர்க்கப்படும் நிதியின் கூடிய அளவு அல்லது குறைந்த அளவு ஏகமனதாகத் தீர்மானிக்கப்படலாம். அங்கத்தவர்களின் பொருளாதாரவயத்திற்கேற்ற வகையில் அதில் மாற்றங்களையும் காலத்துக்குக் காலம் செய்யலாம். சேகரிக்கப்பட்ட நிதயினை ஒவ்வொரு திட்டத்துக்குமாகக் கவனத்துடன் ஒதுக்கீடு செய்யவேண்டும். அங்கத்தவர்கள் தமது அத்தியாவசியத் திட்டங்களையும், முன்னேற்றம் தரக்கூடிய திட்டங்களையும் இனங்கண்டு அவற்றுக்கு நிதியை ஒதுக்கும் போது பயனடைய முடியும்.

இதனைவிட வெளிவாரியாக நிதி சேர்க்கப்படலாம். குறிப்பாக, தொலைப் படக்காட்சி, கலை நிகழ்ச்சிகள், களிப்ப விழாக்கள் என்பவற்றின் மூலமும் மேலதிகமாகச் செயல் திட்டங்களுக்கான நிதியினைச் சேகரிக்கலாம். சிறப்பு

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

(முற்ருெடர்)

# தேசிய கூட்டுறவு நிறுவனங்களின் செயற் திறமையை எவ்வாறு மேம்படுத்தலாம்?

**இலங்கையில் கூட்டுறவு ஆக்க ஆணையாளராகவும், அனைத்துலக கூட்டுறவு நிறுவனத்தின் தென்கிழக்காசிய பிரதேச நெறியாளராகவும் முன்னுள் கடமையாற்றிய திரு. பி. ஈ. வீரமன் கருத்தரங்கு ஒன்றில் சமர்ப்பித்த கட்டுரையின் தமிழாக்கம்.**

தேசிய கூட்டுறவு நிறுவனம் அதனுடன் தொடர்புற்ற கூட்டுறவு இயக்கத்தின் பாராளுமன்றம் எனலாம், கூட்டுறவு இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட விடயங்களை — அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய விடயங்களை — அரசாங்கத்தோடோ அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனத்தோடோ எடுத்துக் கொள்வதே அதன் பணி. அனைத்துலக மட்டத்தில் இயக்கத்தின் பிரதிநிதியாகவும் தேசிய கூட்டுறவு நிறுவனம் விளங்குகின்றது. அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் உறுப்பினராய் இருப்பதன் மூலம் உலகக் கூட்டுறவு இயக்கத்திற்கு தேசிய கூட்டுறவு நிறுவனம் ஆதரவளிக்க வேண்டும். உலகெங்கும் வாழும் கூட்டுறவாளரிடையே செயல் ஒற்றுமையை வளர்ப்பதற்கு அது உழைத்தல் வேண்டும்.

இந்தப் பிரதிநிதித்துவப் பணியின் ஒரு முக்கிய பகுதி இயக்கத்தின் காவல் நாயாக இருத்தலே. இப்பணியின் முக்கியத்துவத்தினை எவ்வளவு அழுத்திஞலும் தகும். இயக்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் அது கண்ணிற்குள் எண்ணெய் ஊற்றிய வண்ணமே இருத்தல் வேண்டும். தனது செவிகளை எப்பொழுதுமே கூர்மையாக வைத்திருத்தல் வேண்டும். இந்த விழிப்பு நிலை வெளியில் நடப்பதைப்பற்றி மட்டுமல்ல உள்ளே நடப்பதைப் பற்றியும்தான். முதலாவதாக இயக்கத்தின் உள்ளே நடைபெறுவன பற்றி அது அறிந்து வைத்திருப்பதோடு கூட்டுறவிற்கு முரணான போக்குகளையும் நடைமுறைகளையும் தவிர்த்துக் கொள்வதற்கு சங்கங்களுக்கு அது வழிகாட்ட வேண்டும். கூட்டுறவுக் கொள்கைகளுக்கு விசுவாசமாக இருப்பதற்கு அவற்றைத் தூண்டவேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு கூட்டுறவுச் சங்கம் கரகர் நிலையிலிருந்து இலாபத்தினை அபகரிப்பதையோ அல்லது தடையற்ற உறுப்புரிமை என்ற கொள்கைக்கு முரணாக ஒரு சிறு குழுவினரின் கைப்பொம்மையாக மாறுவதையோ அது உடனடியாகச் சுட்டிக்காட்டி இத்தகைய செயற்பாடுகள், ஆதாயத்தை ஒழித்தல் திறந்த உறுப்புரிமை என்ற கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அறவே முரணானவை என்பதை இடித்துரைத்து அத்தகைய சங்கத்தை நெறிப்படுத்த முயலவேண்டும். இரண்டாவதாக கூட்டுறவு இயக்கம் குறித்து அரசாங்கம் கடைப்பிடிக்கும் போக்கு பற்றி அது எப்பொழுதும் விழிப்பாக இருத்தல் வேண்டும். இந்தப் போக்கு வெளிப்படையான பகைமையாக இருக்கலாம் அல்லது மூச்சைத்திணற வைக்கும் அரவணைப்பாக இருக்கலாம். படுமோசமான ஆலோசனைகளைக் கைவிடும்படியும் இயக்கத்தின் செம்மையான வளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்கும் சட்டத்தையோ ஏற்பாட்டையோ நீக்குமாறும் அரசாங்கத்தை அது இயன்ற அளவு தூண்டவேண்டும். தமது கூட்டுறவுத் தன்மையை இழந்து அரசாங்கத்தின் பணிப் பெண்களாக கூட்டுறவுச் சங்கங்களை மாற்றக் முடிய விதத்தில் அமைந்திருக்கும் அரசாங்க கொள்கைகளைப் பற்றி அது மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏகபோக அல்லது முகவர் உரிமை வழங்கப்படுபோது இதுவே நிகழ்கின்றது. உறுப்பினரின் விசுவாசமே கூட்டுறவுச் சங்கங்களுக்கு இருக்கவேண்டிய ஏகபோகம். தமது உறுபபினருக்குத் தவிரவேறு எவருக்குமே கூட்டுறவுச் சங்கங்கள் முகவராய் இருத்தல் முடியாது. தமது உறுப்பினருக்கு மட்டுமே கூட்டுறவுச் சங்கங்கள் எப்பொழுதும் பொறுப்பு வாய்ந்தவையாக இருத்தல் வேண்டும். எனவே இரு எஜமான்களுக்கு அவை ஊழியம் செய்ய முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக கூட்டுறவுச் சங்கங்களை நிருவகிப்பதற்கு அல்லது முகாமை செய்வதற்கு அரசாங்கம் முயலுமாயின் இறுதி மூச்சுவரை அதனை எதிர்த்து தேசிய கூட்டுறவு நிறுவனம் போராட வேண்டும். இத்தகைய அரசாங்க முயற்சி சங்க நெறியாளர்களையோ அல்லது பிரகம நிறைவேற்றுத்துறை அதிகாரிகளையோ நியமித்தல் என்ற வடிவத்தில் வழக்கமாக அமைகின்றது. (வளரும்)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு மகளிர்...

நிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்டும்போது எம்முடைய செயல் திட்டங்கள் பற்றிய விவரம், விளக்கம், பயன் ஆகியனவற்றை விளம்பரம் செய்யவும் வாய்ப்பு உண்டாகும்.

வரவு—செலவுத் திட்டத்தை உத்தேசமாகத் தயாரித்தும் செயற்படுத்தலாம். வருட ரீதியான செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு வேண்டிய செலவுகளையும் உத்தேச வரவுகளையும் வரவுகளாகக் கொண்டு அந்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கலாம், திட்டங்கள் ஒவ்வொன்ருக நடைமுறைப் படுத்தப்படும்போது வரவு செலவுத் திட்டத்திற் சிலவேளை சில மாற்றங்கள் செய்ய நேரிடலாம். இது திட்டத்திற்குக் கிடைக்கக்கூடிய வளங்களாலேயே நேரிடலாம் உதாரணமாக, நூலகத்துக்கெனப் பண ஒதுக்கீடு செய்திருக்கும்போது சில சந்தர்ப்பங்களில் நூல்கள் நன்கொடையாகவும் கிடைக்கலாம். இதனுல், நூல்களுக்கு என ஒதுக்கீடு செய்யும் பணச் செலவு குறையலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவ்வாண்டுக்கான வேறு செயல் திட்டங்களிற்கு அவ்வாறு எஞ்சுகின்ற தொகையை உபயோகிப்பதற்கு வரவு—செலவுத் திட்டம் மீளாய்வு செய்யப்படும்.

## 7 நடைமுறைச் சாத்திய மதிப்பீடு

மகளிர் குழுக்கள் தயாரிக்கும் செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்குமுன்னர் அவற்றினை நடைமுறைப் படுத்துவது பற்றிய மதிப்பீட்டினையும் செய்து கொள்ளவேண்டியது அவசியம். உத்தேசமாகத் தயாரிக்கப்படும் திட்டங்கள் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் மனங்கொள்ளப்பட வேண்டும்.

1. குறிப்பிட்ட திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றனவா என ஆராய்தல்.
2. திட்டங்களுக்கான நிதியைப் பெறும் அம்சங்களை உறுதி செய்து கொள்ளுதல்.
3. தேவையான செயல் திட்டங்கள் பற்றிய நடவடிக்கைகள் யாவும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்தல்
4. திட்டத்திற்காகத் தயாரிக்கும் கால அட்டவணைகள் செயற்பாட்டிற்கு உகந்தனவா என்பதை ஆராய்தல்.
5. குறிக்கோளை அடைவதற்கான மாற்றுத் திட்டங்களைப் பரிசீலனை செய்தல். மேற்கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டங்களை மதிப்பிட்டுத் திருத்தங்களை மேற்கொள்ளலாம். வரையறுக்கப்பட்ட குறிக்கோளையும் நோக்கத்தையும் தீவிரமாக எடுத்து விளக்கலாம். சில சந்தர்ப்பங்களிலே ஏற்கெனவே மனங்கொண்ட இலக்குகளையும் திட்டங்களின் எதிர்ப்புக்களையும் குறைத்துங் கொள்ளலாம். புதிய தேவையான குறிக்கோள்களையும்செயல் திட்டங்களையும்மனத்திற் கொண்டுதேவையான வளங்களை மீளாய்வு செய்யலாம் இதனுல், நாம் தயாரித்த செயல் திட்டங்களின் குறைநிறைகளை நாமே மதிப்பீடு செய்து அவற்றின் நடைமுறைச் செயற்பாட்டினை நிச்சயித்துக்கொள்ளவும் முடியும். தனித்தனிக் கிளை ரீதியாகவும் இத்தகைய மதிப்பீடுகள் செய்யப் படலாம்.

## 8. திட்டங்களை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும்.

செயல் திட்டங்களின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். செயல் திட்டங்கள் காலக்கிரமத்தின்படி நடைபெற இது உதவும். உதாரணமாக, திட்டங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து அவற்றினை அட்டவணையாகத் தயாரித்து வைக்கலாம் கால அட்டவணைப்படி திட்டவேலைகள் சரியாக நடைபெற்ருல் திட்டம் சரியாகச் செயல்படுகின்றது என்பதை உணர்ந்து கொள்ளலாம். அட்டவணைப் பிரகாரம் வேலைகள் நடைபெருவிடில், அதற்கான பிரச்சினைகளைக் கண்டறிய முயல வேண்டும். அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்குக் கண்காணிப்பு மிக அவசியம். இதனுல், செயல் திட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இத்தகைய கண்காணிப்பில் சகலரும் இடம் பெறலாம் எனினும் திட்டத்திற்குப் பொறுப்பானவர்கள் முக்கியமாக இதில் ஈடுபடலாம். ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஒவ்வொரு பிரதான நடவடிக்கைகளையும் கண்காணிக்க வேண்டும். இதற்காக, தயாரித்த வேலைத் திட்டங்களையும், திட்டங்களின் குறிக்கோள்களையும், வரவு செலவுத் திட்டங்களையும் வழிகாட்டிகளாகப் பயன் படுத்தலாம், உதாரணமாக, சிறுவருவாய் தரக்கூடிய, சிறிய உற்பத்திகளை ஊக்குவிக்கும் திட்டங்களைத் தயாரிக்கும்போது கண்காணிப்பு மிகவும் அவசியமாகும்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# கிராம அபிவிருத்தியில் மக்கள் பங்குபற்றுதல்:

கிராமப் புறங்களிலே மக்கள் பங்கு பற்றல் அதற்குரிய முற்றும் முழுதான கவனத்தை இன்னும் பெறு தபோதிலும் கைத்தொழில் நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் கணிசமான அனுபவம் இத்துறையிலே திரட்டப்பட்டுள்ளது. உரிமையற்ற குழுக்களைப்பங்கு பற்றச் செய்வதற்கு முன்னர் எடுக்கப்பட்ட முயற்சிகளை ஆராய்ந்தால் மக்கள் பங்குபற்றுவதைத் தூண்டுவதற்குக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சில அடிப்படைக் கொள்கைகளை வகுக்கலாம். இந்த வழிகாட்டுக் கோடுகளை நான் சுருக்கித்தர முயல்கிறேன்.

1. பங்குபற்றுதலை ஊக்குவித்தல். தர்மம் வேண்டாம், நிர்ப்பந்தம் வேண்டாம், வறுமையைப் போக்குவதற்கு மக்கள் பங்குபற்றுவதைத் தூண்டுவதென்றால் பழைய தர்ம பொதுநல அணுகுமுறைகளை நாம் தவிர்த்துக் கொள்ளவேண்டும் இவை தமக்குத் தாமே உதவி செய்ய முடியாதவர்களுக்கு தாமம் வழங்குகின்றன. சுய அமைப்பு, சுயஉதவி ஆகியவற்றின் அடிப்படையிலே உரிமையற்றோருக்கிடையே பங்கு பற்றலை வெற்றிகரமாக ஊக்குவிக்கலாம். மாற்றங்களை ஏற்படுத்த விழையும் நிறுவனங்கள் வெளியிலிருந்து இவர்களுக்கு ஓரளவு உதவலாம்.

நிர்ப்பந்தம் மூலம் மக்களை ஒன்று திரட்ட முனையும் திட்டங்கள் பங்கு பற்கும் கட்டத்திலேயே பங்கு பற்றல் தொடங்க வேண்டும். திட்டங்கள் செயற்படுத்தப்படுகையிலும் இப் பங்கு பற்றல் தொடர வேண்டும். அப்பொழுது தான் மீளூட்ட கட்டுப்பாடு இருக்க முடியும். சமயத்திற்கு ஏற்றவாறு வேண்டிய மாற்றங்கள் ந்த நிறுவனங்களாக உருமாற்றப்படலாம் என்ற தவறான எண்ணம் பரவலாக நிலவுகின்றது.

3. கட்டாய மாதிரியைத் திணிக்க வேண்டாம்.

தமது சொந்த நிறுவனங்களை வளர்த்தெடுப்ப பலாபலன்களைப் பங்குபற்றல் உருவாக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும்:

ஓர் உள்ளூர் நிறுவனம் தொடங்குவதற்குப் பொருத்தமான ஒரு முயற்சியை இனங்காண்பது முக்கியம். இந்த முயற்சி குறிப்பிட்ட காலத்திற்குள் அதகம்

றலுக்கு இசைவாக அமைவதில்லை

2, திட்டங்களை வகுத்தலிலும் அவற்றினை நிறைவேற்றலிலும் பங்குபற்றல்:

என்ன செய்யவேண்டும், எவ்வாறு செய்யவேண்டும் என்பவற்றைத் தீர்மானிக் செய்யப்படலாம். ஆரம்ப கட்டங்களிலே அரசாங்கம் அல்லது தொழில் நுட்ப உதவி நிறுவனங்களால் நிருவகிக்கப்பட்டு நெறிப்படுத்தப்படும் கிராமப்புற நிறுவனங்கள் கல்வித் திட்டங்கள் மூலம் பின்னர் பங்குபற்றல் தன்மை வாய் தற்கு கிராமப்புற மக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். குழு நடவடிக்கைகளுக்கும், அமைப்பிற்குமான மாதிரிகளை ஊக்குவிப்பு நிறுவனங்கள் கட்டாயமாதிரிகளாகத் திணிக்கலாகாது. இருசாராரினதும் மேலும் ஆலோசிக்கப்பட வேண்டிய ஆகவுரைகளாகவே இம் மாதிரிகள் முன்வைக்கப்பட வேண்டும்.

செலவின்றி கணிசமான பெறுபேறுகளைத் தரவல்லதாய இருத்தல் வேண்டும், குழு உறுப்பினரிடையே உள்ள நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் திரட்டி பயன்படுத்தக்கூடியதாய் முயற்சி அமைய வேண்டும்,

7. தமது சொந்தவள ஆதாரங்களிலிருந்து தன் விருப்பார்ந்த முறையில்

### கொன்றுட் வேர்காணென்

4. அபிவிருத்திவேகத்தை முன்கூட்டியே நிர்ணயித்தலாகாது;

ஒவ்வொரு கிராமப்புற நிறுவனமும் தனது நிருவாக வல்லமைகளுக்கு ஏற்ப தனது வளர்ச்சி வேகத்தை நிர்ணயிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண் வழங்குமாறு உறுப்பினர்கள் அழைக்கப்படல் வேண்டும்:

பயன் பெறவிருக்கும் உறுப்பினர்கள் எவ்வளவு கையாலாகாத நிலையில் இருப்பினும் அவர்கள் தன் விருப்பார்ந்த முறையில் வழங்கும் ஏதாவது பங்களி

## உள்ளூர் நிறுவனங்கள் மூலம் இதனை எவ்வாறு ஊக்குவிக்கலாம்?

டும். வெளிநிறுவனங்களிடமிருந்து தூண்டுதலும் ஆதரவும் தேவைதான். எனினும், அவை செயற்கையான வளர்ச்சிக்கு வழிகோலக்கூடாது.

5. குழு நடவடிக்கைகளின் குறிக்கோள்கள்

உணரப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்தல் தான் பங்குபற்றல். மக்களுடைய பங்குபற்றலை ஒழுங்குபடுத்துவதன் குறிக்கோள், குழு உறுப்பினர்களின் அபிலாஷையின் வெளிப்பாடாக இருத்தல் வேண்டும். அவர்கள் தமது வாழ்க்கையை மேம்படுத்தல் வேண்டும் என்ற ஆவலின் வெளிப்பாடாக அது இருத்தல் வேண்டும். இந்த நோக்கத்தை எய்துவதற்கு கூட்டு நடவடிக்கைகள் தேவை என்பதை உறுப்பினர்கள் உணர்தல் வேண்டும்,

6. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டவட்டமான ப்பு—அது மூலதனமாக இருக்கலாம், உழைப்பாக இருக்கலாம் அல்லது காணி நிலமாக இருக்கலாம்—பரவலான பங்குபற்றலுக்கும் வெற்றிக்கும் இன்றியமையாதது என்பது அனுபவவாயிலாக அறியப்பட்ட ஓர் உண்மையாகும். இடுபொருள்களையும் கடன் வசதியையும் வழங்குவதனூடாக சிறு விவசாயிகள், மீனவர் போன்றோரின் வள ஆதார அடித்தளத்தைப் பெருப்பிக்க விரும்பும் திட்டங்களில் இக்கொள்கை மிகவும் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டும். பயன் பெறவிருப்பவர்களின் வள ஆதாரங்கள், பற்று ஈடுபாடு போன்றவற்றைப் பொருட்படுத்தாது மிகக் குறுகிய காலத்தில் திட்டத்தினை முழுமூச்சாகச்செயற்படுத்த வேண்டுமென நிறுவனங்கள் விழைகின்றன.

(வளரும்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு மகளிர்...

உற்பத்திகளைத் தேவைக்கேற்ப உற்பத்தி செய்து சந்தைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு கிளையினரும் தத்தம் உற்பத்திகளைப் பொது இடம் ஒன்றில் வைத்து விற்பனை செய்யக்கூடிய வாய்ப்பு இருக்காது. அதனால் அவ்வக் கிளையினர் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் சேவை எங்கெங்கு இருக்கின்றதென்பதைக் கண்காணித்து விற்பனைத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும்.

9. திட்டங்களை மதிப்பீடு செய்தலும் அவற்றுக்கான வழிவகைகளும்

ஒரு நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தும்போதும் அதை நிறைவேற்றிய பின்பும் சில விடயங்களை நாம் அவதானித்தல் வேண்டும்.

1. எமது திட்டத்தில் எந்த விதமான பிரச்சினைகள் இருக்கின்றன.

2. அதனால், திட்டத்தில் ஏற்படுத்தவேண்டிய மாற்றங்கள் என்ன? முன்னையவற்றில் திட்டம்சாதித்தது என்ன?

3. எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடிந்ததா?

4. திட்டத்தை எவ்வாறு செம்மைப் படுத்திச்சிறந்த பயன்பாட்டைப் பெறமுடியும் அல்லது சிறந்தசேவையை அளிக்க முடியும்,

இவ் விடயங்களை நிர்ணயிப்பதற்காகத் திட்டங்களை ஆராய்ந்து எடைபோடுவதே மதிப்பீடு செய்தலாகும். மதிப்பீடு செய்வதற்கான அடிப்படைத்திட்டம் எத்தகையது என்பதனைப் பின்வரும் அட்டவணை தெளிவுறுத்தும்.

### மதிப்பீடு செயவதற்கான அடிப்படைத் திட்டம்

| வினாக்கள் | குறிகாட்டிகள் | முறைகள் |
|---|---|---|
| 1. மாற்றங்களை உருவாக்குதற்கு திட்டமிட்ட பகுதிகளின் உதாரணங்கள் | அவதானிக்கக் கூடிய அல்லது விவரிக்கக்கூடிய மாற்றங்கள் | மாற்றங்களை அளப்பதற்கான வழிகளின் உதாரணங்கள் |
| 2. எவ்வாறு நிகழ்ச்சித் திட்டம்பாதித்துள்ளது | கூடிய.வருமான நிலை | திட்ட முடிவக்கு முன்பும் பின்பும் நிலையைப் பரிசோதித்தல் |
| 3. திட்டத்தினால் முதலில் பயனடைபவர்கள். | சுகாதாரத்தில் போஷாக்கில் முன்னேற்றம் | திட்ட செயலாக்க அங்கத்தவர்களின் அவதானிப்பு |
| 4. சமூகத்தின் பெண்கள் | புதிய நடவடிக்கைகளில் ங்குகொள்ளல். | நேர்ச் சந்திப்பு கள் |
| 5 இரண்டாவதாகப் பயனடைவோர் | புதிய பழக் வழக்கங்கள் | திட்டப் பொருட்கள், நிகழ்ச்சிகள் |
| 6 சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்கள் | புதிய மனப்பான்மை | வாராந்த அல்லது மாதாந்த அறிக்கைகள் |
| 7, அவர்களின் குடும்பங்கள். | புதிய செயல்முறைகள் | |
| 8 ஆதரவளிக்கும் நிறுவனத்தின் அங்கத்தவர்கள் | | |

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

### கல்வி முன்னோடிகளான

# 19ம் நூற்றாண்டுக் கூட்டுறவாளர்-இலங்காசயர் அனுபவம்

இலவச பொது நூலக அமைப்பு கைக்குழந்தைப் பருவத்திலிருந்த போதே கூட்டுறவு நூலகங்கள் தொடங்கப்பட்டன. இதன் விளைவாக சில கூட்டுறவு நூலகங்கள் மிக விரைவிலே முக்கிய உள்ளூர் நிறுவனங்களாக விளங்கத் தொடங்கின. பல்வேறு துறைகள் சார்ந்த நூல்கள் இங்கு கிடைக்கக் கூடியதாய் இருந்தன. சில சமயங்களிலே நூல்களின் தேர்வு சவக உறுப்பினர்களிடையே சர்ச்சைகளைக் கிளப்பின. எடுத்துக்காட்டாக 1868ல்இலங்காசயர்சங்கத்தன் நூலகம் விஞ்ஞான நூல்களைக் கொள்வனவு செய்தமை குறித்து மதச்சார்புடைய உறுப்பினர்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தனர். கூட்டுறவு நூலகங்கள் முக்கிய பாதிப்பை ஏற்படுத்தின. தொழிலாளர் பற்றிய வாழ்க்கை நூல்களிலிருந்து அவர்களுடைய தனிப்பட்ட ஆளுமை வளர்ச்சிக்கு கூட்டுறவு நூலகம் வகித்த பங்கின் முக்கியத்துவம் புலப்படுகிறது. எடுத்துக்காட்டாக தொழில் கட்சி, தொழிற்சங்கத் தலைவரான J. R. கிளைம்ஸ் என்பவர் தனது வாழ்க்கை நினைவுகளைத் தொகுத்து எழுதிய போது 1880—களில் தான் ஓர் இளம் பருத்தி ஆலைத் தொழிலாளியாகப் பணியாற்றியபோது சொந்தமாக தான் வாங்கிய நூல்கள் மிக அரிதான ஆடம்பரப் பொருட்கள் என்றும் தான் வாசித்த நூல்கள் பெரும்பாலும் ஒல்டாம் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கடன் வாங்கப்பட்டதென்றும் ஷேக்ஸ்பியர் ரஸ்கின், டிக்கின்ஸ் போன்றோரின் படைப்புகளைத் தான் அங்கிருந்துதான் பெற்ருர் என்றும் குறிப்பிடுகின்ருர்.

இதேபோன்று பல கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்றினை எழுதிய ஜேம்ஸ் ஹஸ்லெம் என்பவர் பின்வருமாறு கூறுகின்ருர்:—

''கூட்டுறவுச் சங்க நூலகங்களும் சங்கங்கள் ஒழுங்கு படுத்திய வகுப்புகளும், சொற்பொழிவுகளும் இல்லாதிருந்திருப்பின் எம்மில் பலர் விஞ்ஞானம், கலை, இசை, இலக்கியம் வரலாறு போன்ற கவர்ச்சி மிக்க உலகுகளைத் தரிசிக்காது இருந்திருப்போம். அந்த நாளை நாம் எப்பொழுதும் மனதில் இருத்தி வைத்திருக்கின்ருேம்''

கூட்டுறவு நூலகங்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. நகர்ப்புறங்களிலே நூல்களின் விநியோகத்திற்கு அவர்கள் முக்கிய முகவர்களாக இருந்தனர்.

இலங்காசயரிலிருந்த பல கூட்டுறவுச் சங்கங்கள் பொதுச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தன.

**நிகல் ரொட்**

1880-களின் பிற்பகுதிகளிலிருந்து ஒழுங்கான முறையில் நடாத்தப்பட்டு வந்தன. பல்கலைக்கழக விரிவாக்க இயக்கத்துடன் கூட்டுறவாளர்கள் நெருங்கி உறவாடியதால் கூட்டுறவு இயக்கம் இதற்கு சூடியாட்சித் தன்மையை ஊட்டியது எனலாம். 1868-ல் ரொச்டேல் கூட்டுறவாளரின் கோரிக்கைகளைத் தொடர்ந்து முதல் தடவையாக பல்கலைக்கழக விரிவாக்க இயக்கம் கலந்துரையாடல் முறையையும் கடைப்பிடிக்கத் தொடங்கியது.

1850-களிலேயே ரொச்டேல் சங்கம் வகுப்புக்களை நடத்தத் தொடங்கியிருந்தது. 1890-கள் அளவில் வகுப்புக்கள் கூட்டுறவுக் கல்வியின் இன்றியமையாத பகுதியாகி விட்டன. ரொச்டேல் மூன் உதாரணத்தை வேறு சங்கங்களும் படிப்படியாகப் பின்பற்றத் தொடங்கின. அன்னிய மொழிகள், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றைச் சார்ந்த வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களால் முன்னோடியாகத் தொடங்கப்பட்ட இத்தகைய கல்வியின் பெரு பகுதி 1889-ல் தொழில் நுட்ப போதனமுறி இயற்றப்பட்டதும் உள்ளூராட்சி மன்றங்களின் கைகளுக்கு மாறிவிட்டது. கூட்டுறவாளர்கள் தமது நமது நடவடிக்கைகளை மீளாய்வு செய்து 1887-ல் கூட்டுறவு ஒன்றியத்தின் அக்லென்ட் குழு வெளியிட்ட அறிக்கைக்கு அமைவாக அவற்றினை நெறப்படுத்தத் தொடங்கின, கூட்டுறவுக் கொள்கைகள் கணக்கு வைக்கும் முறை, கைத்தொழில் வரலாறு, பிரஜா உரிமை போன்ற விடயங்களுக்கு வகுப்புகளிலே அழுத்தம் கொடுக்க கூட்டுறவுக் கல்விக் குழுக்கள் தொடங்கின. இத்தகைய வகுப்புகள் சிலவற்றை-குறிப்பாக கூட்டுறவு வரலாறு, கொள்கைகள் பற்றிய வகுப்புகள்—மாணவருக்கும் நடாத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன 1900-க்குப் பின்னர் பல சங்கங்கள் மாணவருக்கான வகுப்புக்களை ஒழுங்கு செய்தன.

(வளரும்)

# சீவல் தொழிலாளரை எதிர்நோக்கும் அச்சம்

மரவரி காலத்தில் அதிகமான பனை தென்னை மரங்களில் தொழிலாளர்கள், பதநீர் ஆகியவற்றைச் சேர்த்தனர். இன்று மரச் சொந்தக்காரர் மரங்களை சீவலுக்குக் கொடுக்க மறுப்பதோடு மரங்களைத் தறித்தும் வருகிருர்கள். இதனுல் சீவல் தொழிலாளர் குறைந்த தொகையினரே இத்தொழிலில் ஈடுபட்டு சிறிதளவு வருமானத்தைப் பெறக் கூடிய நிலை உருவாகிறது.

இவ்வாறு வலி மேற்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் திரு. யோ. செபஸ்தியாம்பிள்ளை சண்டிலிப்பாய் தெங்குப்பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு சு. சிவதாசனின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் சங்கானை, கோண்டாவில், சுன்னுகம், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திரு செபஸ்தியாம்பிள்ளை மேலும் பேசுகையில் சீவல் தொழிலாளரை எதிர்நோக்கும் இந்த அச்சத்தைப் போக்க சண்டிலிப்பாய் பிரிவிலுள்ள இரு கிராம சபைகளுக்கும், இரு பட்டின சபைகளுக்கும் சொந்தமான காணிகளில் பனை, தென்னை மரங்கள் இருப்பின் அவைகளில் சீவுவதற்கு எமது உதவி அரசாங்க அதிபர் ஒழுங்கு செய்து தர வேண்டும். இதற்கு அரசாங்க உதவி அல்லது கடன் வசதித் திட்ட முறையினை வகுத்தால் சீவல் தொழிலாளரை எதிர்நோக்கும் அச்சம் அகன்று பாதுகாப்பு ஏற்படும், இத்தொழில் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முடியும் என்று கூறினுர்

பனங்கட்டி சீனி உற்பத்தி நிலையங்களின் திருத்த வேலைகளுக்கு மானியமாக நிதியுதவ வேண்டும் அல்லது பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கோரும் அவர் சமர்ப்பித்த பிரேரணை நிறைவேறியது.

## மலரே மருந்து

# செவ்வரத்தம் பூ

நமது நாட்டில் எல்லா இடங்களிலும் மிகவும் எளிதாகக் கிடைக்கும் செவ்வரத்தம் பூவைப்பற்றி எல்லோரும் அறிவர். வீட்டுத் தோட்டங்களிலும், பொதுப் பூங்காக்களிலும், கோவில் நந்தவனங்களிலும் இச்செடியை வளர்க்கிருர்கள். இச்செடி எல்லாப் பிரதேசங்களிலும், எத்தகைய சிதோஷணங்களிலும் நன்கு வளரும்.

செம்பரத்தம் பூவில் தங்கச் சத்து இருக்கின்றது நாற்பது நெல்லிடை செம்பரத்தம் பூவைச் சாப்பிட்டால் ஒரு நெல்லிடை தங்கத்தைச் சாப்பிட்ட பயனை நிச்சயமாக அடையலாம்.

இதனைப் பச்சடி செய்து அல்லது வேறு எந்தவகையிலும் உட்கொண்டால் கணைச்சூடு, எலும்புருக்கி, இருதயத்துடிப்பு, மேககாங்கை, உடல் எரிவு, இருமல் வகைகள், தலைவலி, தலைப்பொடுகு முதலிய வியாதிகள் குணமாகும். பொதுவாகச் செம்பரத்தம் பூ உஷ்ண நிவாரணி' கல்லீரலிலும், நீரப்பையிலும் விசேடமாக இருதயத்திலும் ஏற்படும் வியாதிகளை நீக்குவதோடு அந்த உறுப்புகளில் எவ்வித ரோகமும் அணுகாமல் பாதுகாக்கும் தன்மையும் உள்ளது.

நிழலில் உலர்த்திய 10—15 செம்பரத்தம் பூவை இடித்துத் தூளாக்கி ஒரு கண்ணாடி ஜாடியில்போட்டு அதில் கால்படி நல்லெண்ணெயை விட்டு ரண்டு ரூபாய் எடை வெந்தயம், ஒரு ரூபாய் எடை சண்பக மொட்டு, ஒரு ரூபாய் எடை பூவாம் கிழங்கு. ஒரு ரூபாய் எடை வெண்கோஷ்டம் ஆகியவற்றைச் சிறிது வெய்யிலில் உலர்த்தி இடித்துத் தூளாக்கி முன்பு கலந்து வைத்திருக்கும் பூவின் தூள் எண்ணையுடன் சேர்த்து இருதினங்கள் வெய்யிலில் வைத்து, தலைக்குப் பூசிவர உஷ்ணத்தால் ஏற்படும் பொடுகு கரப்பான் முதலியன நீங்குவதுடன் மயிர் உதிர்தல், வெடித்தல், இளம் நரை, கண்ணெரிச்சல், முதலியவைகளும் நீங்கும்.

அதிக உஷ்ணத்தால் கண்களில் நீர் வடிதல், பீளை சாடுதல், தலைவலி, தலை எரிச்சல், உள்ளவர்கள் செம்பரத்தம் பூக்களில் 3 அல்லது 4 காம்பு நீக்கி சிறிது பசும்பால் விட்டு மை போல் அரைத்துத் தலையில் அப்பி விட வேண்டும். பின் அரை அல்லது முக்கால் மணி நேரத்தின் பின் வெந்நீர் அல்லது குளிர்நீரில் முழுக வேண்டும். இப்படிச் செய்துவர குறித்த நோய்கள் அகன்று விடும்.

# சங்கங்கள் சீனி உற்பத்தி செய்ய சாதகமான காலம்!

உலகச் சந்தையில் சீனியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போவதால் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் சீனி உற்பத்தியில் ஈடுபடுவதற்கு சாதகமான காலம் இப்போது இருக்கிறது இதனால் ஒருபோதும் நட்டம் ஏற்படாது

இவ்வாறு உடுப்பிட்டி தேசிய பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்திய கருத்தரங்கிலே பேசுகையில் குறிப்பிட்டார்.

1981 ம் ஆண்டில் பனம் பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் சீனி உற்பத்தியினை ஆரம்பிப்பது தொடர்பாக நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கிற்கு கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. சவேலாயுதபிள்ளை தலைமை வகித்தார்,

திரு இராசலிங்கம் மேலும் பேசுகையில் 1975–76-ம் ஆண்டுக் காலகட்டத்தில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் நவீன உற்பத்திச் சாதனங்கள் இல்லாமலே சீனி உற்பத்தயில் ஒரு சாதனையை நிலை நாட்டியுள்ளன. எனவே, நன்கு திட்டமிட்டு 1981ல் நவீன முறையில் செய்யவிருக்கும் பனஞ்சீனி உற்பத்தியில் நட்டம் ஏற்பட மாட்டாது. இதற்கு உத்தரவாதமாக அரச திட்டமிடல் பகுதி சங்கங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளது என்று குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: பனம் பொருள் உற்பத்திச் சங்கங்களின் உறுப்பினர்களது ஆற்றலையும் உழைப்பையும் நன்கு உணர்ந்து கொண்டதால் திட்டமிடல் பகுதியினர் சங்கங்களினூடாகப் பனஞ்சீனியை உற்பத்தி செய்ய முன் வந்துள்ளனர். அதனை சிதைக்காது சங்கங்கள் பனஞ்சீனி உற்பத்தியில் ஒரு பெரிய சாதனையை உண்டாக்க வேண்டும் இதனால் சங்கங்கள் இலாபத்தை அடைவதோடு நாட்டின் பொருளாதார விருத்தியில் அவை பங்களிப்புச் செய்ததாகவும் அமையும்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டச் செயலாளர் திரு. ம. பத்திநாதன், யாழ் கூட்டுறவுக் கல்லூரி பொறுப்பதிகாரி திரு. இ சுப்பிரமணியம் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு ஈ. நடேசு, வேலணை தெ. ப. பொ கூ. சங்கத் தலைவர் திரு சி. கந்தசாமி ஆகியோரும் பேசினர், சமாசச் செயலாளர் திரு க. நடராசா நன்றி கூறினர்.

## கிளை ரீதியாகச் செயற்படுத்தும் திட்டம்

அண்மையில் நடைபெற்ற நல்லூர் ப. நோ. கூ சங்க மகளிர் குழு இணைப்புக் கூட்டத்தில் சேமிப்பு, மகளிர் சிறுவர் நூல் நிலையம், பாலர் பாடசாலை, கோழி நல்லின ஆடு மாடு வளர்த்தல், அடிப்படை அறிவு புகட்டல், தையல் பயிற்சி, சந்தைப்படுத்தல், வீட்டுத் தோட்டம், தலைமைத்துவத்தை விருத்தி செய்தல், கூட்டுறவு இயக்கத்தில் மகளிர் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல், மகளிர் அங்கத்துவத்தை அதிகரித்தல், சிற்றுண்டிச்சாலை, கல்வித்திட்டம் ஆகியவற்றைக் கிளை ரீதியாகச் செயற்படுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு விளக்கு

"மதியொளி"

கொள்கை மிளிரக் கோபுரத்தில்
விளக்கு எரியுது — அதில்
கூட்டுறவு என்ற புது
விளக்கம் புரியுது
எல்லையற்ற காரிருளை எட்ட
விரட்டுது — புது
எழுச்சி படைக்க வரலாற்று
ஏட்டைப் புரட்டுது

ஏமாந்து வாழ்ந்திருந்த
காலமும் உண்டு — அதை
இணைந்து வெல்வோம் கூட்டுறவின்
துணையைக் கொண்டு
பூமலரும் புத்தொளியின் வெளிச்சம்
கண்டோம் — இனி
புதுவழியில் நடப்பதற்கு வழியும்
கொண்டோம்.

சுரண்டலற்ற பாதையிலே
சாலை விளக்காம் ... என்றும்
சுணங்காது வளம் பெருக்கும்
சோலை விளக்காம்
திரண்ட சக்தி கொண்டு எங்கும்
ஒளிரும் விளக்காம் ... நாளும்
தேசம் வாழ உழைக்கும் கூட்டு உறவு
விளக்கம்.

# சுவடிகள்

—கரகரப்பிரியா—

## மன்மதன் வில் கருப்பு

தமிழ் சமஸ்கிருத இலக்கியங்களில் கரும்பு மன்மதனின் வில்லாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பழம் பெரும் இந்தியச் சிற்பங்களில் இதனை நாம் இன்றும் காணலாம். வேதங்களிலும் கரும்பு பற்றிய குறிப்புக்கள் உள்ளன,

'ஷுகர் கேன்' என்று ஆங்கிலத்தில் கரும்பைக் குறிப்பிடும் பதம் 'இனிப்பான நாணல்' என்ற அர்த்தத்தைக் கொண்டுள்ளது.

கரும்பின் விஞ்ஞானப் பெயர் 'சக்காரம் அபிசினேரம்'. 'சர்க்கரை' என்ற சொல் 'சர்க்கரா' என்ற வடமொழிச் சொல்லின் திரிபாகும். இது கரும்பின் விஞ்ஞானப் பெயரிலுள்ள 'சர்க்காரம்' என்னும் பெயரிலிருந்து வந்தது என்றும் கூறுவர்.

மகா அலெக்சான்டர் கி. மு. 327 ல் இந்தியாவின் மீது படையெடுத்த போது அவரது படைத் தலைவர்களான நியர்க்கஸ், அனெசிக் ரைட்டன் ஆகியோர்கள் "இந்தியாவில் தேனீக்களின் உதவி இல்லாமல் தேனைக் கொடுக்கக் கூடிய செடி ஒன்று உள்ளது" என்று கரும்பைப்பற்றி கூறியுள்ளார்கள்

கரும்பாலைகள் பல பண்டைத் தமிழகத்தில் இருந்தன என்று சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நூல்களிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. சீன சக்கரவர்த்தியொருவர் வெல்லம் தயாரிக்கும் முறையைக் கற்பதற்காக கி. பி 600 ல் தமிழகத்திற்குக் குழு ஒன்றை அனுப்பினாரென வரலாற்று நூல்கள் குறிப்படுகின்றன.

கரும்பைக் கணுக்கணுவாக வெட்டியே பயிரிடலாம். அதன் வயது 10 முதல் 12 மாதங்களாகும்.

## பெயர் பல சுவை ஒன்று

தேயிலையை ஆங்கிலத்தில் Tea என்பர். Tea என்ற சொல் சீனவிலிருந்து தோன்றியதாம் காண்ட்னீஸ் மொழியில் Chah (சா) எனவும், அமாய் வழக்கில Tay எனவும் வழங்கப்படுகிறது. Chah என்ற பதமே இந்தியா, ஜப்பான், பேர்சியா, ரஷ்யா போன்ற நாடுகளில் அறிமுகமானது. இந்தியில் சாய்' என்பது Chah என்ற பதத்தின் தழுவலாக உள்ளது. மலையாளத்தில் 'சாயா' என்ற பதமும் இதுபோல வ.

ஆங்கிலேயர் Tay என்ற சொல்லிலிருந்து Tea என்ற சொல்லைப் பெற்றனர். Tea என்று எழுதப்பட்டாலும் 18-ம் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை Tay என்றே வழங்கப்பட்டு வந்தது.


திருப்திகரமான
சலவைக்கும், பளிச்சிடும்
வெண்மைக்கும்
மில்வைற் நீலசோப்பை
வாங்கி உபயோகியுங்கள்




மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி
பெறுமதிவாய்ந்த பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

✱ ✱ ✱

'மில்க்வைற்' - யாழ்ப்பாணம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவின்...

யுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் தமது ஆவலை உற்சாகத்தோடு தெரிவித்துள்ளன. இப்பகுதியில் இக்கல்வித்திட்டம் சிறப்பாக இயங்குவதற்கு ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை கல்வி உதவியாளர் ஒருவரை முழுநேர உத்தியோகத்தராகப் பணிபுரியும்படி கொடுத்து உதவியுள்ளது என்று தொடர்ந்து பேசுகையில் அவர் கூறினார்.

## மகளிருக்கு வாய்ப்பு

கூட்டுறவு மகளிர் குழுக்களை அமைப்பதன் மூலம் மகளிர் கூட்டுறவு இயக்கத்தில் பங்குபற்றி உழைக்க வாய்ப்பு வகுக்கப்படுகிறது என்று தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்ட அவர், யாழ்ப்பாண கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் இப்பகுதியில் மகளிர் குழுக்கள் இயங்குவதற்கு ஆர்வம் மிக்க உழைப்பினை வழங்குகின்றார் என்றும் குறிப்பிட்டார்.

## படிக்க விடயங்கள் உண்டு

சுவீடினைச் சேர்ந்த திரு. நெல்சன் பேசுகையில் மேற்கு நாட்டவர் கூட்டுறவு பற்றிப் படிப்பதற்கு இங்கு பல விடயங்கள் இருக்கின்றதெனக் குறிப்பிட்டார்.

மகளிர் குழு எந்தெந்த விதமாகக் கூட்டுறவு முயற்சிகளில் சிறப்பாக ஈடுபடவேண்டுமோ அவ்வாறு எல்லாம் ஈடுபட முயன்று வருகின்றது என்பதை இங்கு பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. அபிவிருத்திக்கென கூட்டுறவுக்குக் கொடுக்கப்படும் நிதிகள் சிறப்பாகப் பயன்படுத்தப் படுகின்றன என தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

## வாழ்வை வளப்படுத்தலே நோக்கம்

வாழ்வை வளம்படுத்தலே மகளிர் பாவனையாளர் கல்வி தகவல் திட்டத்தின் நோக்கமாகும் என மேற்படி திட்டத்தின் நெறியாளர் செல்வி ஜயந்தா தென்னக்கோன் பேசுகையில் குறிப்பிட்டார்.

குடும்பத் தலைவி தனது குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை எவ்வாறு திட்டமிட்டு வாங்க வேண்டும். ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளை எவ்வாறு தயாரிக்க வேண்டும், சிக்கனமான முறையில் எவ்வாறு செலவழிக்கவேண்டும் என்பதற்கான வழிவகைகளை இத்திட்டம் குடும்பத் தலைவிகளுக்கு அறிவுறுத்தி பயிற்சியளித்துவருகிறது. இதனால் மகளிர் தமது குடும்ப வாழ்வைச் செவ்வனே அமைத்துக் கொள்ளலாம் எனத் தொடர்ந்து பேசுகையில் அவர் விளக்கினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: 1978-ம் ஆண்டில் சுவீடனிலுள்ள சர்வதேச அபிவிருத்தி அதிகார சபை (சிட்டா) சுவீடன் கூட்டுறவு நிறுவனம், சுவீடன் கூட்டுறவு பாவனையாளர் வட்ட சமாசம் ஆகியவற்றின் உதவியுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

## சிறந்த தலைமை

முதலாவது கட்டமாக ஐந்து குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் ஒன்று தமிழ்ப் பகுதியில் தெல்லிப்பளை ப. நோ கூ. சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அக்குழு சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. யாழ் மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி வேதவல்லி கந்தையாவின் சிறந்த தலைமையில் மகளிர் மாவட்டக்குழு நன்கு செயற்பட்டு வருகின்றது

இரண்டாவது கட்டமாக 0 குழுக்கள் அமைக்கப்பட்டன. பல்வேறு பகுதிகளிலுமுள்ள மகளிர் குழுக்களின் பிரதிநிதிகள் எல்லோரும் இவ்வாறு சந்திப்பதன் மூலம் பிரயோசனமான கருத்துக்களைப் பரிமாற முடியும்.

## திட்டம் வேண்டும்

'மகளிர் குழுக்களின் பிரதிநிதிகள் எல்லோரும் ஓர் இடத்தில் சந்தித்து தாம் தயாரிக்கப்போகும் பொருள்கள் பற்றி திட்டமிட்டு தமது பகுதிகளிலுள்ள மூலப் பொருள்களைக்கொண்டு வெவ்வேறு பொருள்களைத் தயாரிக்கவேண்டும். எல்லோரும் ஒரே பொருளைச் செய்தால் அவைகளைச் சந்தைப்படுத்துவதில் கஷ்டங்கள் ஏற்படும்',

இவ்வாறு நல்லூர் ப. நோ. கூ. சங்க மகளிர் குழுத் தலைவி மனோன்மணி சண்முகதாஸ் பேசுகையில் கூறினார்.

மகளிருக்கு கூட்டுறவு உணர்வு மாத்திரம் இருந்தால் போதாது, அவர்களிடையே அறிவும் இருத்தல் வேண்டும். இதன் அடிப்படையில் நல்லூர் ப. நோ. கூ. சங்க மகளிர் குழு மகளிருக்கான ஒரு நூல் நிலையத்தை ஆரம்பித்துள்ளது என்று மேலும் பேசுகையில் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுத்தலைவர் திரு ஆ. மு. ஆலாலசுந்தரமும் பேசினார், மாவட்டச் செயலாளர் திரு ம. பத்திநாதன் நன்றி கூறினார்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம், வலி கிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்கம்' நல்லூர் ப. நோ. கூ. சங்கம் ஆகியவற்றிலுள்ள மகளிர் குழுக்களை திரு. ஆர். பி. இராஜகுரு, திரு. சி. அங்குணவெல, செல்வி ஜயந்தா தென்னக்கோன் ஆகியோர் மாவட்ட செயலாளருடன் சென்று பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடியதோடு அவர்கள் அளித்த கலை விருந்துகளையும் கண்டு சுவைத்தனர்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

# சங்கங்களின்...

இம்மகாநாட்டில் ஆராயப்படவிருக்கும் மேற்படி விடயங்களை முதலில் மாவட்டங்கள் தோறும் மாவட்டமட்டத்திலான ப. நோ. கூ. சங்கத் தலைவர்களின் மகாநாடுகளை நடாத்தி அவற்றில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பின்பு அத்தீர்மானங்களை கொழும்பில் நடாத்தவிருக்கும் தேசிய மகாநாட்டில் சமர்ப்பித்து கலந்துரையாடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளபடும். இவ்விபரங்களை ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. டபிள்யூ. எம். பி போகலகம குறித்த மகாநாடு பற்றி ப. நோ கூ. சங்கங்களின் தலைவர்களுக்கும் மாவட்ட செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மகாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு மதிய போசனம் வழங்கப்படும் என்றும் பிரயாணப்படி, தங்கு வசதியும் ஆகியன சங்கங்களினாலேயே வழங்கப்படும் என தான் எதிர்பார்ப்பதாகவும் தலைவர் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மகாநாட்டில் கலந்து கொள்ள விரும்புவோர் 31-12-80 திகதிக்கு முன் பூர்த்திசெய்து அனுப்புவதற்கான படிவமும் குறித்த கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

# ஈழத்து எழுத்தாளரின்...

முதன்மைகளாக விளங்கும் பத்திரிகைகள் எழுத்தாளனின் ஒரு படைப்புக்கு ஆகக் கூடிய தொகையாக இருபது அல்லது இருபத்தைந்து ரூபாவினைப் 'பெரிய மன'தோடு கொடுத்துவருகின்றன.

இந்நிலையிலேகூட ஈழத்து எழுத்தாளராகிய அருள் சுபபிரமணியம் நாற்பதினாயிரம் ரூபா வரையில் பரிசாகப் பெற்றமைதான் பெரிய விடயம் என்று முதலில் தோன்றவில்லை.

இலங்கை, இந்தியா என்றில்லாது எங்கெங்கு தமிழ் எழுத்தாளர்கள் இருக்கின்றார்களோ அவர்கள் எல்லோரும் பங்குபற்றக்கூடிய விதத்தில் பரந்து பட்ட அடிப்படையில் நடாத்தப்பட்ட போட்டியில் ஈழத்து எழுத்தாளராகிய அருள் சுபபிரமணியத்தின் எழுத்துத் திறமை முதற் பரிசுக்குரியது என்று கணிக்கப்பட்டதே அதுதான் மிகப் பெரிய பரிசு; மறப்பு: ஈழத்து எழுத்துலகின் வரலாற்றிலே ஒப்பற்ற சாதனை!

எனவே, திறமையால் சிறப்பினைப் பெற்ற திறமை செறிந்த சாதனையாளராகிய அருள் சுப்பிரமணியத்திற்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்,

அவரின் திறமையினைப் பாராட்டி தமிழகத்துப் பத்திரிகைகள் அழகாக எழுதியுள்ளன.

அருள் சுப்பிரமணியத்திற்குப் பரிசினை வழங்கிய கலைஞர் மு. கருணாநிதி பேசுகையில், "ஈழத்து எழுத்தாளர் பரிசினைப் பெறுவது தமிழகத்திற்கும் ஈழத்திற்குமிடையே இலக்கியப் பாலம் அமைக்க உதவும் என்று நம்புகிறேன்" என்று கருத்துத் தெரிவித்துள்ளார்

ஆம் அருள் சுப்பிரமணியத்தின் திறமைகளையொத்த உண்மையான திறமைகளை பரஸ்பரம் உளத்தூய்மையோடு உண்மையாக மதிப்பதும், வளர்ப்பதும்தான் இலக்கியப் பாலம் அமைக்கும் பணியாகும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு மகளிர்...

இவ்வாறு மதிப்பீடு செய்யும்போது திட்டச் செயலாக்கத்தினால் எதிர்பாராத விளைவுகளும் ஏற்படலாம். அவற்றைத் தீர்த்துக்கொள்ள வழிவகைகளையும் இதனால் நாம் தேட முடியும், திட்டம் செயற்படுத்தப்படும்போது, செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள், எதிர் நோக்கிய பிரச்சினைகள்; பலாபலன்கள் என்பவற்றை நன்கறிந்து அவற்றை எதிர்காலத்தில் குறைத்துக்கொள்வதற்கும் இம் மதிப்பீடு பெரிதும் உதவும்.

குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கும் இம் மதிப்பீடுகள் உதவியாக இருக்கும். அத்துடன் செயல் திட்டத்தின் செயற்பாட்டுக்குத் தடையாக இருந்த காரணிகளையும் அறிந்து கொள்ள முடியும். இன்னும் எதிர் காலத்தில் செயல் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உறுதியான சிபாரிசுகளையும் நாம் செய்ய முடியும். செயல் திட்டங்கள் வெற்றியளிக்காததற்குரிய காரணங்களை நாம் அறிந்து கொள்வதுடன் ஏனையோருக்கும் அதனை எடுத்துச் சொல்ல முடியும். இத்தகவல்களைப் பலரும் அறிவதனால் புதிய செயல் திட்டங்களைத் திறமையுடன் தயாரித்து சிறப்புடன் நடைமுறைப்படுத்த முடியும், கூட்டுறவின் மகளிர் குழுவின் செயல் திட்டங்கள் யாவும் இத்தகைய விரிவான கண்காணிப்புக்கும் மதிப்பீடுக்கும் உள்ளாவதனால், குறைகளற்ற சிறந்த செயல் திட்டங்களாக மக்கள் வாழ்வுக்குப் பயன்படும் திட்டங்களாக அமைய முடியும். (முற்றும்)

யா. ப. நோ. கூ. ச. இணையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 18, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 341-79
Registered as a News Paper at the General Post Office, Sri Lanka Under No QB/8965/80